வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 25.05.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பயங்கரவாதத்திற்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை நம்பிக்கையையும், உற்சாகத்தையும் உலகம் முழுவதும் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அனைவரும் யோக கலையை பயின்று ஆரோக்கியமான வாழ்வை வாழ வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை குஜராத்தில் 24 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான மேம்பாட்டு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

உலக தைராய்டு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

*மன் கீ பாத்* 1 (18)

பயங்கரவாதத்திற்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை நம்பிக்கையையும், உற்சாகத்தையும் உலகம் முழுவதும் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று காலை ஆகாஹ்வானியில் மன் கீ பாத் நிகழ்ச்சியில் நாட்டு மக்களுடன் உரையாற்றினார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது இந்திய படையினர் வெளிப்படுத்திய பராக்ரமம் இந்தியர்களை பெருமிதம் கொள்ள செய்துள்ளதாக அவர் தெரிவித்தார். பயங்கரவாதத்திற்கு எதிராக மக்கள் நாடு முழுவதும் ஒன்றுப்பட்டு உறுதியோடு உள்ளதாக அவர் கூறினார். பயங்கரவாதத்திற்கு முடிவு கட்ட வேண்டும் என்பதே அனைத்து இந்தியர்களின் உறுதிப்பாடாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூரின் துல்லியம் மற்றும் தீவிரமான தாக்குதல் காரணமாக எல்லை தாண்டிய பயங்கரவாதிகளின் பதுங்குமிடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். ஆபரேஷன் சிந்தூர் என்பது ராணுவத்தின் செயல்பாடு என்பது மட்டும் அல்லாமல், மாறிவரும் இந்தியாவின் காட்சியாக அனைவரது உள்ளத்திலும் தேசபக்தியை ஊட்டி உள்ளதாக பிரதமர் தெரிவித்தார். நாட்டின் பல நகரங்கள், மற்றும் சிறிய கிராமங்களில் கூட ஆயிரக்கணக்கான மக்கள் மூவர்ண கொடியை கையில் ஏந்தி ராணுவத்தினருக்கு தங்களது நன்றி கலந்த வணக்கத்தை



வெளிப்படுத்தினர் என்றும் அவர் தெரிவித்தார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையால் பல குடும்பங்கள் அதை தங்களது வாழ்க்கையின் ஒரு அங்கமாக கருதி பிறந்த குழந்தைகளுக்கு சிந்தூர் என பெயர் சூட்டி உள்ளனர் என்றும் பிரதமர் தெரிவித்தார். மக்களிடம் இது எந்த அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். ஆபரேஷன் சிந்தூர் முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கருவிகள் மற்றும் ஆயுதங்களை கொண்டு நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார். உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் என்ற இயக்கத்திற்கு புதிய சக்தி ஏற்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். நமது வாழ்க்கையில் முடிந்தவரையில் உள்நாட்டு பொருட்களுக்கு குரல் கொடுப்போம் என்று அனைவரும் உறுதி ஏற்றுக்கொள்வோம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். மாவோயிஸ்டு தீவிரவாதம் நிறைந்த பகுதிகளில் தற்போது அற்புதம் ஏற்பட்டு இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். மகராஷ்டிரா மாநிலம் கட்சிரொலி மாவட்டத்தில் உள்ள காடேஜரி கிராமத்தில் முதன் முதலாக பேருந்து அண்மையில் சென்றபோது அங்குள்ள மக்கள் மேளதாளத்துடன் அதனை வரவேற்றனர் என்றும், இது தீவிரவாத்திற்கு எதிரான அரசின் நடவடிக்கையால் நிகழ்ந்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

யோகா (4)

சர்வதேச யோகா தினம் அடுத்த மாதம் 21 ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில், அனைவரும் யோக கலையை பயின்று ஆரோக்கியமான வாழ்வை வாழ வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு....

யோகா வாய்ஸ் (17)

122 ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய பிரதமர் திரு நரேந்திர மோடி யோக கலையை இன்னும் பயில தொடங்கவில்லை என்றால் மக்கள் இப்போதே அதனை தங்களது வாழ்வில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார். 2015 ஆம் ஆண்டு முதல் சர்வதேச யோகா தினம் கொண்டாடப் பட்டதில் இருந்து உலகம் முழுவதும் இதன் மேல் ஈர்ப்பு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார். ஆந்திர மாநில அரசு யோகாந்திரா இயக்கத்தை தொடங்கி இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். இந்த முறை இளைஞர்கள் நாட்டின் மரபோடு தொடர்புடைய பாரம்பரிய இடங்களில் யோக கலையை மேற்கொள்ள இருப்பதாக அவர் கூறினார். உடல் நலம் மற்றும் உடல் உறுதி தொடர்பாக மக்களிடம் போதிய விழிப்புணர்வு ஏற்பட்டு இருப்பது தமக்கு மிகுந்த ஆர்வத்தை அளித்திருப்பதாக அவர் தெரிவித்தார். யோக கலையோடு ஆயுர்வேத மருத்துவத்தை பின்பற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இம்மாதம் 24 ஆம் தேதி உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் துளசி பாய் முன்னிலையில் ஆயுஷை உலகம் முழுவதும் விஞ்ஞானம் மூலம் அதிக அளவு மக்கள் கொண்டு சேர்க்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

மோடி குஜராத் (10)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல் 2 நாட்களுக்கு குஜராத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். நாளை காலை தாஹோத் நகரில் அமைக்கப்பட்டுள்ள ரயில் இன்ஜின் உற்பத்தி தொழிற்சாலையை நாட்டுக்கு அர்ப்பணித்து வைக்கிறார். தொடர்ந்து மின்சார ரயில் இன்ஜினையும் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார். பின்னர் தாஹோத் நகரில் சுமார் 24 ஆயிரம் கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி வேறு பல நிறைவடைந்த திட்டங்களை தொடங்கி வைக்கிறார். பிற்பகல் புஜ் நகருக்கு செல்லும் பிரதமர் அங்கு 53 ஆயிரத்து 400 கோடிக்கும் அதிகமான பல மேம்பாட்டு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களை தொடங்கி வைக்க உள்ளார்.

*தைராய்டு தினம்* (4)

உலக தைராய்டு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இத்தினம் தைராய்டு கோளாறுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஆரம்ப கால நோயறிதலை கண்டுபிடித்து சிகிச்சை அளிக்கவும் அனுசரிக்கப்படுகிறது. இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

வாய்ஸ்“

*தைராய்டு வாய்ஸ்* (16)

தைராய்டு தொடர்பான ஏதெனும் பிரச்சனைகள் இருப்பதாக கண்டறிந்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டியதன் அவசியத்தையும் இந்நாள் நினைவூட்டுகிறது. தைராய்டு சுரப்பி என்பது கழுத்தின் அடிப்பகுதியில் அமைந்துள்ள ஒரு சிறிய பட்டாம்பூச்சி வடிவ சுரப்பியாகும். அளவில் சிறிதாக இருந்தாலும், அதன் பங்கு மகத்தானதாகும். வளர்சிதை மாற்றம், இதய துடிப்பு, உடல் வெப்பநிலை, ஆற்றல் அளவுகள், மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் மன நல்வாழ்வு உள்ளிட்ட முக்கியமான செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தும்

ஹார்மோன்களை இது உற்பத்தி செய்கிறது. தைராய்டு கோளாறுகள் ஏற்பட்டால் எடை அதிகரிப்பு அல்லது இழப்பு, கழுத்தில் வீக்கம் அல்லது கட்டி, குளிர் அல்லது வெப்ப உணர் திறன், மனநிலை அதிகரிப்பு, பதட்டம், மனசோர்வு, ஒழுங்கற்ற மாதவிடாய் போன்ற முக்கிய பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அயோடின் நிறைந்த உணவுகளை உட்கொள்வது தைராய்டு ஹார்மோன் உற்பத்திக்கு அவசியமாகும். வழக்கமான பரிசோதனைகள் மற்றும் நடைபயிற்சி, யோகா அல்லது நீச்சல் போன்ற செயல்பாடுகள் மூலம் தைராய்டு ஆரோக்கியத்தை அதிகரிக்க உதவுகிறது.

*ஞாயிறு -பரம் வீர் சக்ரா* 1 (6)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையீல் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1971 ஆம் ஆண்டு இந்தோ- பாக் போரில் நாட்டிற்காக உயிர்தியாகம் செய்து, பரம்வீர் சக்ரா விருது பெற்ற Lance Naik ஆல்பர்ட் எக்கா குறித்து ஒரு தொகுப்பு……

**(வாய்ஸ்)**

*ஞாயிறு-பரம் வீர் சக்ரா* 2 (18)

**(வாய்ஸ்)** 1942 ஆண்டு ராஞ்சியில் பிறந்தவரான Lance Naik ஆல்பர்ட் எக்கா, 1962 டிசம்பரில் **14 ஆவது Guards** படைப் பிரிவில் சேர்க்கப்பட்டவராவார். 1971 ஆம் ஆண்டு இந்தோ-பாக் போரின் போது, கிழக்கு மண்டலத்தின் அகர்த்தலாவிற்கு மேற்கே ஆறரை கி.மீ தூரத்தில் இருந்த பாகிஸ்தானின் கங்காசாகர் ராணுவ நிலையை கைப்பற்றும் பொறுப்பு, 14 ஆவது Guards படைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்படை பிரிவினர் தாக்கதலை தொடக்கிய போது Lance Naik ஆல்பர்ட் எக்கா, படைப் பிரிவின் இடது முன்னிலைக் குழுவில் ஒருவராக சென்றார். எதிரி படையினர் குண்டுவீச்சு மற்றும் கனரக ஆயுதங்களால் இந்திய படைகளை தாக்கினர். அப்போது எதிரி படைகளின் பதுங்கு குழியில் இருந்து, இயந்திர துப்பாக்கி மூலமான குண்டுகள் சரமாரியாக வெளிப்படுவதை Lance Naik எக்கா கவனித்து, இதனால் இந்திய படையினருக்கு பேரிழப்பு ஏற்படலாம் என்பதை உணர்ந்தார், சொந்த பாதுகாப்பு குறித்து அவர் கொஞ்சமும் கவலைப்படாமல், பதுங்கு குழிக்குள் இருந்த எதிரிப் படையினர் இருவரை, தமது துப்பாக்கி முனை ஈட்டியால் தாக்கி, இயந்திர துப்பாக்கியை செயலிழக்கச் செய்தார். இந்நடவடிக்கையின் போது மோசமாக காயமடைந்த நிலையிலும், அவர் அடுத்தடுத்து எதிரிப் படைகளின் பதுங்கு குழிகளை தாக்கிக்

*ஞாயிறு- பரம் வீர் சக்ரா* 3 (18)

கைப்பற்றுவதில் முனைப்பாக இருந்தார். ஆர்பர்ட் எக்காவும் அவரது சக விரர்களும் தங்களுடைய இலக்கின் வடகோடியை எட்டிய போது, பலத்த பாதுகாப்புடன் கூடிய ஒரு கட்டிடத்தில் இருந்து எதிரிகள் நடுத்தர இயந்திர துப்பாக்கி மூலம் சுடத் தொடங்கியதால், இந்திய படையினர் கடும் இழப்புகளை சந்தித்து மேலும் முன்னேற முடியாமல் தடைப்பட்டனர். அப்போது Lance Naik எக்கா மீண்டும் கைகொடுத்தார். எதிரிகளின் கட்டிடத்தை நோக்கி அவர் தவழ்ந்தே சென்று பதுங்கு குழி மீது கையெறி குண்டு ஒன்றை வீசியதில், எதிரி படையில் ஒருவர் கொல்லப்பட்டு மற்றொருவர் காயமடைந்தார். தொடர்ந்து பக்க சுவரை பற்றிக் கொண்டே மேலேறி எதிரிகளின் பதுங்கு குழிக்குள்ளேயே ஆல்பர்ட் எக்கா

இறங்கினார். குழிக்குள் இருந்த எதிரி படையினரை துப்பாக்கி முனை ஈட்டியால் தாக்கி எதிரிகளின் இயந்திர துப்பாக்கியை செயலிழக்க செய்தார். இதனால் இந்திய படைகளுக்கு மேலும் இழப்பு ஏற்படுவது தவிர்க்கப்பட்டு இறுதியில் வெற்றி உறுதியாயிற்று. ஆயினும் சண்டையின் போது ஏற்பட்ட காயங்களால் Lance Naik ஆல்பர்ட் எக்கா பின்னர் உயிர் தியாகம் செய்தார். இத்தகைய அபார துணிச்சல் மற்றும் மனு உறுதிக்காக, மரணத்திற்கு பிந்தைய முறையில் அவருக்கு பரம்வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது. Lance Naik ஆல்பர்ட் எக்காவிற்கு நாடு தலை வணங்குகிறது.

*வருங்கால வைப்பு நிதி* (6)

2024-25 ஆம் நிதியாண்டிற்கான ஊழியர் வருங்கால வைப்பு தொகைகளுக்கு 8.25 சதவிகித வட்டியை மத்திய அரசு அங்கீகரித்துள்ளது. இந்த விகிதம் நடப்பு ஆண்டின் தொடக்கத்தில் ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் மத்திய அறங்காவலர் குழுவால் பரிந்துரைக்கப் பட்டதாகும். இதனால் இந்தியா முழுவதும் 7 கோடிக்கும் மேற்பட்ட சம்பளம் பெறும் ஊழியர்கள் பயனடைவர்.

*நித்தி ஆய்வுக் குழு தலைமை செயல் அதிகாரி* (11)

ஜப்பானை பின்னுக்கு தள்ளி இந்தியா உலகின் 4 ஆவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளது. 10 ஆவது நித்தி ஆய்வுக் குழு கூட்டம் குறித்து செய்தியாளர்களை சந்தித்த நித்தி ஆய்வுக் குழு கூட்டத்தின் தலைமை செயல் அதிகாரி திரு பி.வி.ஆர் சுப்பிரமணியம் சர்வதேச நிதியத்தின் தரவுகளின் படி இது தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறினார். நாம் அனைவரும் எதிர்பார்த்தபடி இந்தியா 4 வது இடத்திற்கு முன்னேறி இருப்பதாகவும், 4 டிரில்லியன் பொருளாதார நாடாக உருவெடுத்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அமெரிக்கா, சீனா, ஜெர்மனிக்கு அடுத்து இந்தியா முன்னேறி உள்ளதாக அவர் கூறினார்.

அடுத்த 2 முதல் 3 ஆண்டுகளில் 3 வது பொருளாதார நாடு என்ற இடத்தை இந்தியா பிடித்து விடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.